உ

# சைவத் திருமுறைத் திரட்டு




## அமரர். திருமதி. மகேஸ்வரி தர்மராஜா
## அவர்களின்
# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் - சீசீ
சினமே தவிராய் **திருமுறைகள்** ஓதாய்
**மனமே** உனக்கென்ன **வாய்**
பிரமாபுரத்து பெம்மானை
**மனம்** கவர் கள்வனென மூன்று வயதிலேயே
புனித **வாய்** மலர்ந்தருளிய
திருஞான சம்பந்தர் தேவாரம் தொடக்கம்,
பூசு நீறுபோல் உள்ளமும் புனிதரான
எம்பெருமான் அடியார்களது
வான்புகழைக் கொண்ட பெரியபுராணம் ஈறான
சைவத் திருமுறை பன்னிரண்டும்
வாழ்வினை செம்மைப்படுத்தி மக்களைத்
தெய்வத் திருநெறிக்கண் கொண்டு சேர்ப்பன
ஆதலினால்,
எப்பொழுதும் ஆனந்த தேன் சொரியும்
இறைவன் பாதங்களுக்கு அர்ச்சிக்கப்பட்ட
திருமுறைப் பாக்களாகி பூக்களிலிருந்து
ஒருசில பாமலர்களைத் திரட்டி
யாமறிந்த சில ஞானியர்களின் நல்வழிகாட்டலின்
தெளிவை ஞான மலராக செதுக்கியும்
அமரர் **மகேஸ்வரி தர்மராஜா** அவர்களது
**நினைவாக** அவனருளாலே அவன் தாளை
**வாயினும் மனத்தும்** வாழ்த்தி வணங்கி,
சிலம்பொலி அலம்பும் மலர்சிலம்படிக்கே
இம்மலரை மீண்டும் சமர்ப்பிக்கின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பூழியர்கோன் வெப்பொழித்த புகழியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கன் மிதப்பில் அணைந்த பிரானடி போற்றி
வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச்செய்த

# தேவாரம்

# முதலாந் திருமுறை

திருவலிவலம் பண்- வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

திருப்பிரமபுரம் பண்- நட்டபாடை

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகல னாப்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல் கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவின வெள்வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுல கின்முதலாகிய வோரூரிது வென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி விளங்குதலையோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவந்தென துள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவர வம்மலர்க்கொன்றை மலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

ஒருமைபெண்மையுடை யன்சடையன்விடை யூரும்மிவனென்ன
அருமையாகவுரை செய்யமவர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர் காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைகலந்தவொலி பாடலோடாடல ராகிமழுவேந்தி
இறைகலந்தவின வெள்வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழினீடுயர் சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

சடைமுயங்குபுன லன்னனலன்னெரி வீசிச்சதிர்வெய்த
உடைமுயங்குமர வோடுழிதந்தென துள்ளங்கவர்கள்வன்
கடன்முயங்குகழி சூழ்குளிர்கானலம் பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரமேவிய மெம்மானிவனன்றே.

வியரிலங்குவரை யுந்தியதோள்களை வீரம்விளைவித்த
உயரிலங்கையரை யன்வலிசெற்றென துள்ளங்கவர்கள்வன்
துயரிலங்கும்முல கிற்பலவூழிக டோன்றும் பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

தாணுதல்செய்திறை காணியமாலொடு தண்டாமரையானும்
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென துள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மக ளீருமுதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

புத்தரோடுபொறி யில்சமணும்புறங் கூறநெறிநில்லா
ஒத்தசெல்லவுல கம்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறு கவ்வுரிபோர்த்ததோர் மாயம்மிதுவென்னப்
பித்தர்போலும்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய பெம்மானிவன் றன்னை
ஒரு நெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தனுரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்தலெளிதாமே.

**திருச்சிற்றம்பலம்**

**திருமருகல்** **பண்- வினாவுரை நட்டபாடை**

அங்கமும்வேதமு மோதுநாவர் அந்தணர்நாளு மடிபரவ
மங்குன்மதிதவழ் மாடவீதிமருக னிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங் கணபதியீச்சரங் காமுறவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவண்ணாமலை பண்- நட்டபாடை

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்த வருவித்திரண் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே.

தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுவன்மிசை சிறுநுண்டுளி சிதற
ஆமாம்பிணை யணையும்பொழி லண்ணாமலை யண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி நினைவார்வினை யிலரே.

திருப்பழனம் தக்கேசி

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளை யெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரி தோலார்
நாதாவெனவு நக்காவெனவு நம்பாவென நின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநக ராரே.

# இரண்டாந் திருமுறை

## திருநீற்றுப்பதிகம்

திருவாலவாய் காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தநதிர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயாண் திருநீறே

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தற் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

எயிலது வட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே.

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யால வாயான் திருநீறே

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்க டங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் திருநீறே

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து மால வாயான் திருநீறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்ற லடல்விடை யேறு மாலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

பொது பியந்தைக்காந்தாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொ டாமை யிவைமார் பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

உருவளர் பவள மேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

மதிநுதல் மங்கை யோடு வடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
கொதியுறு கால னங்கி நமனோடு தூதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்ட னெந்தை மடவாள்த னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமிடியு மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வாள்வரி யதள தாடை வரிகோ வணத்தர்
மடவாள்த னோடும் உடனாய்
நாண்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
கோளரி யுழுவை யோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

செப்பிள முலைநன் மங்கை யொருபாக மாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய் தன்று விடைமேல் இருந்து
மடவாள்த னோடும் உடனாய்
வாள்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
ஏழ்கடல் சூழி லங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலபல வேட மாகும் பரன்நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெ ருக்கு முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

கொத்தலர் குழலி யோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியு நாக முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
புத்தரொ டமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொ ளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வார் ஆணை நமதே.

திருச்சிற்றம்பலம்

## திருவலஞ்சுழி நட்டராகம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்ன(ம்) நீபுரி நல்வினைப் பயனிடை முழு மணித்தரளங்கள்
மன்னு காவிரி சூழ் திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி ஆதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்றாந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

திருவாவடுதுறை — காந்தார பஞ்சமம்

இடரினுந் தளரினும் எனது றுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

வாழினுஞ் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

நனவினும் கனவினும் நம்பாஉன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனல்எரி அனல்புகு கையவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றாதென்நாக்
கைம்மல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதில் எரிஎழ முனிந்தவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

கையது வீழினும் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தைசெய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாய் உன்னடியலால் ஏத்தாதென்நா
ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் அடியலால் அரற்றாதென்நா
ஒப்புடை ஒருவனை உருவழிய
அப்படி அழலெழ விழித்தவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

பேரிடர் பெருகியோர் பிணிவரினும்
சீருடைக் கழல்அலால் சிந்தை செய்யேன்
ஏருடை மணிமுடி யிராவணனை
ஆரிடர் படவரை அடர்த்தவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும்நின்
ஒண்மல ரடியலால் உரையாதென்நா
கண்ணனும் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலும் அளப்பரி தாயவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாவுன் னடியலால் அரற்றாதென்நா
புத்தரும் சமணரும் புறன்உரைக்கப்
பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைபுனல் ஆவடுதுறை அமர்ந்த
இலைநுனை வேற்படை யெம் இறையை
நலமிகு ஞானசம்பந்தன் சொன்ன
விலையுடை அருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயினநீங் கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன் ஏறுவர் நிலமிசை நிலையிலரே

திருச்சிற்றம்பலம்

திருக்கழுமலம் — கொல்லி

மண்ணின்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் ல∴துறும் கழுமல வளர்நகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

## நமச்சிவாயத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

பொது — கௌசிகம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாமம் நமச்சி வாயவே.

நம்பு வாரவர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெல்லாம்
நம்ப னாமம் நமச்சி வாயவே.

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்து
அக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்க னாமம் நமச்சி வாயவே.

இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலல்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன நாமம் நமச்சி வாயவே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீக்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே.

மந்த ரம்மன பாவங்கண் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே.

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரத னாமம் நமச்சி வாயவே.

இலங்கை மன்ன னெடுத்த வடுக்கன்மேல்
தலங்கொள் காள்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொ ணாமம் நமச்சி வாயவே.

போதன் போதன கண்ணனு மண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி யலந்தவர்
ஓது நாமம் நமச்சி வாயவே.

கஞ்சி மண்டையர் கையினுண் கையர்கள்
வெஞ்சொன் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே.

நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாச மறுக்கவல் லார்களே.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை

புறநீர்மை

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமு னித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியும் யிடைவைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக
மாக முன் கலந்தவர் மதின்மேல்
தனித்தபே ருருவ விழித் தழல்நாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமலனாா் கமலமாா் பாதா்
தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடற் றரளஞ்
செம்பொனு மிப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமா்ந் தாரே.

தாயினு நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றி சைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினா் காண்பல வேடா்
நோயிலும் பிணியும் தொழிலா்பா ல்நீக்கி
நுழைதரு நூலினா் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமா்ந் தாரே.

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிா் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ண முதைத்தவற் கருளுஞ்
செம்மையாா் நம்மையா ளுடையாா்
விரிந்துயா் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமா்ந் தாரே.

எடுத்தவன் றருக்கை யிழித்தவா் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவா் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவா் வேள்வி
தடுத்தவா் வனப்பால் வைத்ததோா் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவா் விரும்பும் பெரும்புக ழாளா்
கோணமா மலையமா்ந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
அகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரு மறியா வண்ணமொள் ளெரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே.

நின்றுணுஞ் சமணு மிருந்துணுந் தேரு
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசின ரொருபான்
மெல்லியலொடு முடனாகித்
துன்றுமொண் பெளவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபலமோதிக்
குன்று மொண்கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே.

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்தும்
உரைப்பவர் கேட்பவ ருயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

3ம் திருமுறை பண்: பழம்பஞ்சுரம்

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பதும் உன்பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே
பிரம புரத்தை உகந்தனையே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரசு நாயனார் அருளிச்செய்த
# தேவாரம்
# நான்காந் திருமுறை

திருவதிகை வீரட்டானம் பண்: கொல்லி

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

நெஞ்சம்முமக் கேயிட மாகவைத்தேன்
நினையாதொரு போதுமிருந்தறியேன்
வஞ்சம்மிது வொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
அஞ்சேலு மென்னீர் அதிகைக் கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தேஉமக் காட்செய்து வாழலுற்றாற்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர்
பெற்றமேற்றுகந் தீர்சுற்றும் வெண்டலை கொண்டு
அணிந்தீரடி கேள்அதிகைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

முன்னம்அடி யேன்அறி யாமையினான்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னைஅடி யேனுமக் காளும்பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னைஅடைந் தார்வினை தீர்ப்பதன்றோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையாயவர் தங்டகன் ஆவதுதான்
அன்னநடை யார்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரைநின்றவர் கண்டுகொள் என்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்
வார்த்தையிது வொப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புனல் ஆர்கதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்ததியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலர்ந்தார் தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

உயர்ந்தேன்மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர்தலை காவல் இலாமையினால்
வயந்தேஉமக் காட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தேயென் வயிற்றின் அகம்படியே
பறித்துப்புரட் டிஅறுத் தீர்த்திடநான்
அயர்ந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

வலித்தேன்மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம்மனம் ஒன்றும் இலாமையினால்
சலித்தால் ஒருவர்துணை யாருமில்லைச்
சங்கவெண்குழைக் காதுடை யெம்பெருமான்
கலித்தேயென் வயிற்றின் அகம்படியே
கலக்கிமலக் கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன்சடை யீர்மெலி யும்பிறையீர்
துன்பேகவ லைபிணி யென்றிவற்றை
நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
என்போலிகள் உம்மை யினித்தெளியார்
அடியார் படுவ திதுவேயாகில்
அன்பேஅமை யும்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

போர்த்தாயங்கோ ரானையின் ஈரிருதோல்
புறங்கா டரங்காநட மாடவல்லாய்
ஆர்த்தான் அரக் கன்றனை மால்வரைக்கீழ்
அடர்த்திட்டருள் செய்த அதுகருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என்வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார்புனல் சூழ் அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

திருச்சிற்றம்பலம்

## திருவதிகை வீரட்டானம்

காந்தாரம்

சுண்ணவெண் சந்தனச் சாந்துச் சுடர்திங்கட் சூளாமணியும்
வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முர ணேறும் அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை.

## திருவையாறு

காந்தாரம்

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்றபோது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேனவர்திருப் பாதங் கண்டறியாதன கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவங்கமாலை

திருச்சிற்றம்பலம்

பொது சாதரி

தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீவணங்காய்.

கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின் றாடும்பி ரான்றன்னைக்
கண்காள் கண்மின்களோ.

செவிகாள் கேண்மின்களோ - சிவன்
எம்பிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்றிற மெப்போதும
செவிகாள் கேண்மின்களோ.

மூக்கே நீமுரலாய் - முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீமுரலாய்.

வாயே வாழ்த்துகண்டாய் - மத
யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பி ரான்றன்னை
வாயே வாழ்த்துகண்டாய்.

நெஞ்சே நீநினையாய் - நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கைம ணாளனை
நெஞ்சே நீநினையாய்.

கைகாள் கூப்பித்தொழீர் - கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித்தொழீர்.

ஆக்கை யாற்பயனென் - அரன்
கோயில் வலம்வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்கையால் அட்டிப் போற்றி என்னாதஇவ்
ஆக்கையாற் பயனென்.

கால்க ளாற்பயனென் - கறைக்
கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்
கால்களாற் பயனென்.

உற்றா ராருளரோ - உயிர்
கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லானமக்கு
உற்றா ராருளரோ.

இறுமாந் திருப்பன்கொலோ - ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்று
இறுமாந் திருப்பன்கொலோ.

தேடிக் கண்டுகொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே
தேடிக் கண்டுகொண்டேன்.

திருச்சிற்றம்பலம்

## நமச்சிவாயத்திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

பொது — காந்தாரபஞ்சமம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே.

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகில்அவை யொன்று மில்லையாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே.

இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே.

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கல மருமறை யாறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே.

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமில னாடொறு நல்கு வானலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே.

வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினா ரந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே.

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே.

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்து
ஏத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே.

**திருச்சிற்றம்பலம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாந் திருமுறை

கோயில் திருக்குறுந்தொகை

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ.

தீர்த்த னைச்சிவ னைச்சிவ லோகனை
மூர்த்தியை முதலாய ஒருவனைப்
பார்த்த னுக்கருள் செய்தசிற் றம்பலக்
கூத்த னைக்கொடி யேன்மறந் துய்வனோ.

கட்டும் பாம்புங் கபாலங்கை மான்மறி
இட்ட மாயிடு காட்டெரி யாடுவான்
சிட்டர் வாழ்தில்லை யம்பலக் கூத்தனை
எட்ட னைப்பொழு தும்மறந் துய்வனோ.

மாணி பால்கறந் தாட்டி வழிபட
நீணு லகெலாம் ஆளக் கொடுத்தவென்
ஆணியைச் செம்பொ னம்பலத் துள்நின்ற
தாணு வைத்தமி யேன்மறந் துய்வனோ.

பித்த னைப்பெருங் காடரங் காவுடை
முத்த னைமுளை வெண்மதி சூடியைச்
சித்தனைச் செம்பொ னம்பலத் துள்நின்ற
அத்த னையடி யேன்மறந் துய்வனோ.

நீதி யைநிறை வைமறை நான்குடன்
ஓதி யையொரு வர்க்கும் அறிவொணாச்
சோதி யைச்சுடர்ச் செம்பொனி னம்பலத்து
ஆதி யையடி யேன்மறந் துய்வனோ.

மைகொள் கண்டனெண் தோளன்முக் கண்ணினன்
பைகொள் பாம்பரை யார்த்த பரமனார்
செய்ய மாதுறை சிற்றம்பல லத்தெங்கள்
ஐய னையடி யேன்மறந் துய்வனோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுதும் வானுல கத்துள தேவர்கள்
தொழுதும் போற்றியும் தூயசெம் பொன்னினால்
எழுதி மேய்ந்தசிற் றம்பலக் கூத்தனை
இழுதை யேன்மறந் தெங்ஙன முய்வனோ

காரு லாமலர்க் கொன்றையந் தாரனை
வாரு லாமுலை மங்கை மணாளனைத்
தேரு லாவிய தில்லையுட் கூத்தனை
ஆர்கி லாஅமு தைமறந் துய்வனோ

ஓங்கு மால்வரை ஏந்தலுற் றான்சிரம்
வீங்கி விம்முற ஊன்றிய தாளினான்
தேங்கு நீர்வயல் சூழ்தில்லைக் கூத்தனைப்
பாங்கி லாத்தொண்ட னேன்மறந் துய்வனோ.

திருச்சிற்றம்பலம்

**திருக்கடம்பூர்** **திருக்குறுந்தொகை**

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

திருச்சிற்றம்பலம்

**பொது** **தனித் திருக்குறுந்தொகை**

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

**கோயில்** **பெரிய திருத்தாண்டகம்**

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

**திருப்பூவணம்** **திருத்தாண்டகம்**

வடியேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியந் தோன்றுந் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில் திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.

**திருமறைக்காடு** **திருத்தாண்டகம்**

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீயென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

திருச்சிற்றம்பலம்

## திருப்புகலூர் திருத்தாண்டகம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுள்ளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

அங்கமே பூண்டாய் அனலாடினாய்
ஆதிரையாய் ஆல்நிழலாய் ஆனே றூர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்சடையினாய்
பாம்பொடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்
கங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே உன்னடிக்கே போது கின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே.

பையரவக் கச்சையாய் பால்வெண் ணீற்றாய்
பளிக்குக் குழையினாய் பண்ணா ரின்சொல்
மைவிரவு கண்ணாளைப் பாகங் கொண்டாய்
மான்மறிகை ஏந்தினாய் வஞ்சக் கள்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐவரையும் என்மேல் தரவறுத்தாய்
அவர்வேண்டுங் காரியமிங் காவ தில்லை
பொய்யுரையா துன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

தெருளாதார் மூவெயிலுந் தீயில் வேவச்
சிலைவளைத்துச் செங்கணையாற் செற்ற தேவே
மருளாதார் தம்மனத்தில் வாட்டந் தீர்ப்பாய்
மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய் வானோர்க்கென்றும்
அருளாகி ஆதியாய் வேத மாகி
அலர்மேலான் நீர்மேலான் ஆய்ந்துங் காணாப்
பொருளாவாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

நீரேறு செஞ்சடைமேல் நிலா வெண்டிங்கள்
நீங்காமை வைத்துகந்த நீதி யானே
பாரேறு படுதலையிற் பலிகொள் வானே
பண்டனங்கற் காய்ந்தானே பாவ நாசா
காரேறு முகிலனைய கண்டத் தானே
கருங்கைக் களிற்றுரிவை கதறப் போர்த்த
போரேறே உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

விரிசடையாய் வேதியனே வேத கீதா
விரிபொழில்சூழ் வெண்காட்டாய் மீயச் சூராய்
திரிபுரங்கள் எரிசெய்த தேவ தேவே
திருவாரூர்த் திருமூலட் டானம் மேயாய்
மருவினியார் மனத்துளாய் மாகா ளத்தாய்
வலஞ்சுழியாய் மாமறைக்காட் டெந்தாயென்றும்
புரிசடையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

தேவார்ந்த தேவனைத் தேவ ரெல்லாம்
திருவடிமேல் அலரிட்டுத் தேடி நின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கடவுளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

நெய்யாடி நின்மலனே நீல கண்டா
நிறையுடையாய் மறைவல்லாய் நீதி யானே
மையாடு கண்மடவாள் பாகத் தானே
மான்தோல் உடையாய் மகிழ்ந்து நின்றாய்
கொய்யாடு கூளவிங் கொன்றை மாலை
கொண்டடியேன் நானிட்டுக் கூறி நின்று
பொய்யாத சேவடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

துன்னஞ்சேர் கோவணத்தாய் தூய நீற்றாய்
துதைந்திலங்கு வெண்மழுவாள் கையி லேந்தித்
தன்னனையுந் தண்மதியும் பாம்பும் நீருஞ்
சடைமுடிமேல் வைத்துகந்த தன்மை யானே
அன்ன நடைமடவாள் பாகத் தானே
அக்காரம் பூண்டானே ஆதி யானே
பொன்னங் கழலடிக்கே போது கின்றேன்.
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

ஒருவனையும் அல்லா துணரா துள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவறுத்தாய்க் கில்லேன் ஏலக்
கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன்
கடுத்தேர்மீ தோடாமைக் காலாற் செற்ற
பொருவரையாய் உன்னடிக்கே போது கின்றேன்.
பூம்புகாலூர் மேவிய புண்ணியனே.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்த

# தேவாரம்

# ஏழாந் திருமுறை

**திருவெண்ணெய்நல்லூர்** **இந்தளம்**

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாய்இனி அல்லேனென லாமே.

நாயேன்பல நாளும்நினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
ஆயா உனக் காளாய்இனி அல்லேலென லாமே.

மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அனனேஉனக் காளாய்இனி அல்லேன்என லாமே.

முடியேன்இனிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்றம் ஊர்தி
கொடியேன்பல பொய்யேஉரைப் பேனைக்குறிக் கொள்நீ
செடியார் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அடிகேள்உனக் காளாய் இனி அல்லேன்என லாமே.

பாதம்பணி வார்கள்பெறு பண்டமது பணியாய்
ஆதன்பொரு ளானேன் அறி வில்லேன்அரு ளாளா
தாதார் பெண்ணைத் தென்பால்வெண்ணெய நல்லூரருட்டுறையுள்
ஆதீஉனக் காளாய் இனி அல்லேன்என லாமே.

தண்ணார்மதி சூடிதழல் போலுந்திரு மேனீ
எண்ணார்புர மூன்றும்எரி யுண்ணநகை செய்தாய்
மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அண்ணாஉனக் காளாய் இனி அல்லேன்என லாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனாய்உயி ரானாய்உட லானாய்உல கானாய்
வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய்
தேனார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
ஆனாய் உனக் காளாய் இனி அல்லேன்என லாமே.

ஏற்றார்புரம் மூன்றுமெரி யுண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வான்நீர்
ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
ஆற்றாய்உனக் காளாய் இனி அல்லேன்என லாமே.

மழுவாள்வலன் ஏந்தீமறை யோதீமங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தல்லுன தொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அழகாஉனக் காளாய்இனி அல்லேன்என லாமே.

காரூர்புன லெய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புக ழெய்தித்திகழ் பன்மாமணி யுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
ஆரூரன்எம் பெருமாற்காள் அல்லேன்என லாமே.

## திருவாரூர் — கொல்லிக்கௌவானம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

## திருமழபாடி — நட்டராகம்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புகலூர் கொல்லி

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்கி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதருஞ் சோறுஞ் கூறையும்
ஏத்த லாமிடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே.

திருப்பாண்டிக்கொடுமுடி பழம்பஞ்சுரம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக்கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும்நா நமச்சி வாயவே.

இட்ட னுன்னடி ஏத்து வார்இகழ்ந் திட்ட நாள்மறந்திட்டநாள்
கெட்ட நாளிவை என்ற லாற்கரு தேன்கி ளர்புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்டடிதொழு தேத்து பாண்டிக் கொடுமுடி
நட்ட வாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும்நா நமச்சி வாயவே.

ஓவு நாள்உணர் வழியும்நாள் உயிர்போகும் நாள்உயர் பாடைமேல்
காவு நாள்இவை என்றலாற்கரு தேன்கிளர் புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்திழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடி
நாவ லாஉனை நான்மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சி வாயவே.

எல்லை யில்புகழ் எம்பிரான் எந்தை தம்பி ரான்என்பொன்மாமணி
கல்லை யுந்தி வளம்பொழிந்திழி காவிரியதன் வாய்க்கரை
நல்ல வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்ல வாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே.

அஞ்சி னார்க்கர ணாதி என்றடி யேனும் நான்மிக அஞ்சினேன்
அஞ்ச லென்றடி த்தொண்ட னேற்கருள் நல்கி னாய்க்கழி கின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவை மார்குடைந் தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்ச ணிகண்ட நான்ம றக்கினுஞ் சொல்லும்நா நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏடு வான்இளந் திங்கள் சூடினை என்பின் கொல்புலித் தோலின்மேல்
ஆடு பாம்ப தரைக்க சைத்த அழக னேஅந்தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்தி ழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடிச்
சேட னேஉனை நான் மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சி வாயவே.

விரும்பி நின்மலர்ப் பாதமேநினைந் தேன்வி னைகளும் விண்டன
நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெழில்பெற நின்ற காவிரிக் கோட்டிடைக்
குரும்பை மென்முலைக் கோதை மார்குடைந் தாடு பாண்டிக்கொடுமுடி
விரும்பனேஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும்நா நமச்சி வாயவே.

செம்பொ னேர்சடை யாய்தி ரிபுரந் தீயெ ழச்சிலை கோலினாய்
வம்பு லாங்குழ லாளைப் பாக மமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவ மாமயில் ஆடு பாண்டிக் கொடுமுடி
நம்ப னேஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும்நா நமச்சி வாயவே.

சார ணன்தந்தை எம்பி ரான்எந்தை தம்பி ரான்என்பொன் மாமணியென்று
பேரெணாயிர கோடி தேவர் பிதற்றி நின்று பிரிகிலார்
நார ணன்பிர மன்தொ ழுங்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடிக்
கார ணாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும்நா நமச்சி வாயவே.

கோணிய பிறை சூடி யைக்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
பேணியபெரு மானைப் பிஞ்ஞகப் பித்த னைப்பிறப் பில்லியைப்
பாணு லாவரி வண்ட றைகொன்றைத் தார னைப்படப் பாம்பரை
நாண னைத்தொண்டன் ஊரன் சொல்லிவை சொல்லு வார்க்கில்லை
துன்பமே.

**திருச்சிற்றம்பலம்**

## திருக்கேதீச்சரம் — நட்டபாடை

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

சுடுவார்பொடி நீறுந்நல துண்டப்பிறை கீளும்
கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாஉறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கம்மொழி யன்னாரவர் அமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன்னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே.

கரியகறைக் கண்டன்நல கண்மேல்ஒரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயும் மாதோட்டநன் னகருள்
பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லாண்திருக் கேதீச்சரத் தானே.

அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கம் செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே.

வெய்யவினை யாயவ்வடி யார்மேலொழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்ட நன்னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத்தானே.

ஊனத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்ட நன்னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்திருக் கேதீச்சரத்தானே.

அட்டன்னழ காகவ்வரை தன்மேலரா வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்ட நன்நகரில்
பட்டவ்வரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
தேவன்எனை ஆள்வான்திருக் கேதீச்சரத் தானே.

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்ட நன்னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்எனை ஆள்வான்திருக் கேதீச்சரத் தானே.

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார் பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத்தானை
மறையார்புகழ் ஊரன்னடித் தொண்டன்னுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாரூர் செந்துருத்தி

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளேகனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னாக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே

திருவையாறு காந்தாரபஞ்சமம்

பரவும் பரிசொன் றறியேன்நான் பண்டே உம்மைப் பயிலாதேன்
இரவும் பகலும் நினைந்தாலும் எய்த நினைய மாட்டேன்நான்
கரவில் அருவி கமுகுண்ணத் தெங்கங் குலைக்கீழ்க் கருப்பாலை
அரவந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ.

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய
## திருவாசகம் திருக்கோவையார் ஆகிய
# எட்டாந் திருமுறை

**திருவாசகம்**

# 1. சிவபுராணம்

**திருப்பெருந்துறையில் அருளியது**

**சிவனது அநாதி முறைமையான பழமை**

**(கலி வெண்பா)**

***திருச்சிற்றம்பலம்***

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுது என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க!

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பொய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவா ருண்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி ;
தேசனடி போற்றி சிவன் சேவடிபோற்றி ;
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி ;
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி ;
சீரார் பெருந்துறைநந் தேவனடிபோற்றி .;

ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
**சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை**
**முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்**

கண்ணுதலான் தன் கருணைக் கண் காட்டவந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங் கொளியாய்
எண்ணிறந் தெல்லையிலாதானே நின்பெருஞ் சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்;

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லரசு ராகி முனிவராயத் தேவராயச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்;
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன் ;
உய்ய என் உள்ளத்து ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழந்தகன்ற நுண்ணியனே !

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்க மளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பாய் யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பில்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோரும் மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

**தாயிற் சிறந்த தயாவான தத்துவனே**
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேச்னே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்

பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

## முற்றிற்று

போற்றியோம் நமச்சிவாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோம் நமச்சிவாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோம் நமச்சிவாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோம் நமச்சிவாய சயசய போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

## திருவண்ணாமலையில் அருளியது
## சத்தியை வியந்தது

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழத்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போ திப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைத்தீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எந்தோநின் அன்புடைமை எல்லாம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடரோ நம் சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.

ஒண்ணித திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான்ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்.

**முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே**
**பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே**
**உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்**
**உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்**
**அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து**
**சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்**
**இன்ன வகையேயெமக் கெங்கோன் நல்குதியேல்**
**என்ன குறையுமிலோ மேலோர் எம்பாவாய்.**

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதோர் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒருதோழன் தொண்ட ருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்.

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடீ செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
**கோதை** குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதிதிறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து **நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்**
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றெ நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான் பணியாள
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப்பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய்நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

**உங்கையிற்பிள்ளை உனக்கே அடைக்கலமென்று**
**அங்கு அப்பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்**
**எங்கள் பெருமான் உனக்கொன்று ரைப்போங்கேள்**
**எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க**
**எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க**
**கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க**
**இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்**
**எங்கேழிலென் ஞாயிறெமக் கேலோர் எம்பாவாய்.**

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்.

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

(ஆனந்த மனோலயம்)

**தில்லையில் அருளியது (எண்சீர் ஆசிரிய விருத்தம்)**

**திருச்சிற்றம்பலம்**

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமி யும்பார் மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுஞ் கௌரி யும்பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறனஅம் மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே.

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்து நாமே.

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன் நன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்து நாமே.

காசணி மின்கள் உலக்கையெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே.

அறுகெடுப் பாரஅய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்துநாமே.

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடகம் மெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னக்கோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே.

வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மைஇம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடற் பொற்சுண்ணம் இடித்து நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொ டாட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற்சுண்ணம் இடித்து நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு எங்கள் அப்பன்
எம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன் எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண் முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ் குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே

ஞானக் கரும்பின் தெளியைப்பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்து நாமே

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்தியவெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்து நாமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடை மேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே

அயன் தலை கொண்டு செண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்து நாமே

வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்து நாமே

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாயிருள் ஆயினார்க்குத்
துன்பமு மாய் இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளி எழுச்சி

திரோதான சத்தி
திருப்பெருந்துறையில் அருளியது
திருச்சிற்றம்பலம்

போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எமை யுடையாய்
எம்பெருமான்பள்ளி எழுந்தரு ளாயே.

அருணன் இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழவெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல் அங்கண்ணாம்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின் சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெருமான்பள்ளி எழுந்தருளாயே.

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலிகூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே.

**பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்**
**போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்**
**கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்**
**கேட்டறியோம் உனைக் கண்ட றிவாரைச்**
**சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா**
**சிந்தனைக்கும் அறியாய் எங்கள் முன்வந்து**
**ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்**
**எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.**

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கிண்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொன் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் னடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங்காட்டி
அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே.

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேஉ ன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ **மேஇந்தப் பூமி**
**சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்**
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில் மூத்த திருப்பதிகம்

அநாதியாகிய சற்காரியம்

திருத்தில்லையில் அருளியது

திருச்சிற்றம்பலம்

உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள்
நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப
தானால் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும்
வண்ணம் முன்னின்றே.

முன்னின்று ஆண்டாய் எனைமுன்னம் யானும்
அதுவே முயல்வுற்றுப்
பின்னின் றேவல் செய்கின்றேன் பிற்பட்
டொழிந்தேன் பெம்மானே
என்னின் றருளி வரநின்று போந்திடு
என்னா விடில்அடியார்
உன்னின் றிவனார் என்னாரோ பொன்னம்
பலக்கூத் துகந்தானே.

உகந்தா னேஅன் புடையடிமைக் குருகா
உள்ளத் துணர்விலியேன்
சகந்தான் அறிய முறையிட்டால் தக்க
வாறன் றென்னாரோ
மகந்தான் செய்து வழிவந்தார் வாழ
வாழ்ந்தாய் அடியேற்குன்
முகந்தான் தாரா விடின்முடிவேன் பொன்னம்
பலத்தெம் முழுமுதலே.

முழுமுத லேஐம் புலனுக்கும் மூவர்க்
கும்என் தனக்கும்
வழிமுத லேநின் பழவடி யார்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரள்வான் குழுமிக்
கெழுமுத லேஅருள் தந்திருக்க இரங்குங்
கொல்லோ என்று
அழுமது வேயன் றிமற்றென் செய்கேன்
பொன்னம் பலத்தரைசே.

அரைசே பொன்னம் பலத்தாடும் அமுதே
என்றுன் அருள்நோக்கி
இரைதேர் கொக்கொத் திரவுபகல்
ஏசற் றிருந்தே வேசற்றேன்
கரைசேர் அடியார் களிசிறப்பக் காட்சி
கொடுத்துன் அடியேன்பால்
பிரைசேர் பாலின் நெய்போலப் பேசா
திருந்தால் ஏசாரோ.

ஏசா நிற்பர் என்னைஉனக் கடியான்
என்று பிறரெல்லாம்
பேசா நிற்பர் யான்தானும் பேணா
நிற்பேன் நின்னருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்குந் திருவோ
லக்கஞ் சேவிக்க
ஈசா பொன்னம் பலத்தாடும் எந்தாய்
இனித்தான் இரங்காயே.

**இரங்கும் நமக்கம் பலக்கூத்தன் என்றென்று**
**ஏமாந் திருப்பேனை**
**அருங்கற் பனைகற் பித்தாண்டாய் ஆள்வார்**
**இலிமாடு ஆவேனோ**
**நெருங்கும் அடியார் களும்நீயும் நின்று**
**நிலாவி விளையாடும்**
**மருங்கே சார்ந்து வரஎங்கள் வாழ்வே**
**வாவென் றருளாயே.**

அருளா தொழிந்தால் அடியேனை அஞ்சேல்
என்பார் ஆர்இங்குப்
பொருளா என்னைப் புகுந்தாண்ட பொன்னே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம் பலக்கூத்தா
மருளார் மனத்தோடு உனைப்பிரிந்து வருந்து
வேனை வாவென்றுன்
தெருளார் கூட்டங் காட்டாயேல் செத்தே
போனாற் சிரியாரே.

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு
திரண்டுஉன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வேறு
இருந்துஉன் திருநாமம்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந் தலைவா
என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ நம்பி
இனித்தான் நல்காயே.

நல்கா தொழியான் நமக்கென்றுன்நாமம்
பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறா வணங்கா
மனத்தால் நினைந்துருகிப்
பல்கால் உன்னைப் பாவித்துப் பரவிப்
பொன்னம் பலமென்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கிரங்கி அருளாய்
என்னை உடையானே.

**திருச்சிற்றம்பலம்**

**திருத்தில்லை**

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மைநினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
**சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்**
**திருப்பெருந் துறையுறை சிவனே**
**ஒன்றும்நீ யல்லை அன்றியொன் றில்லை**
**யாருன்னை அறியகிற் பாரே.**

தந்துன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான் இதற் **கிலன்ஓர்கைம் மாறே.**

வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட
முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய்நீ வேண்டி
என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள்செய்தாய் யானும்
அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும்
உன்றன் விருப்பன்றே.

அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட் கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்டோள்
முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ
இதற்கு நாயகமே.

**அம்மையே** அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதமளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

**பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்**
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

**திருச்சிற்றம்பலம்**

**திருச்சிற்றம்பலக்கோவை**

திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண்டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியி னொல்கி யனநடைவாய்ந்து
உருவளர் காமன்றன் வென்றிக்கொடிபோன் றொளிர்கின்றதே.

# 9ம் திருமுறை

## திருவிசைப்பா

## திருமாளிகைத் தேவர் அருளிச் செய்தது.

**கோயில்** **பஞ்சமம்**

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங்க காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் **தாயைத்**
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ!
அடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேந்தனார் அருளிச் செய்தது

திருவீழிமிழலை பஞ்சமம்

ஏக நாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## கருவூர்த் தேவர் அருளிச் செய்தது

திரைலோக்கியசுந்தரம் காந்தாரம்

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ? அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே

## பூந்துருத்தி நம்பிகாடநம்பி அருளிச் செய்தது

திருவாரூர் பஞ்சமம்

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள்! இவர்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுரு இருந்தவர் பாரீர்
சக்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய நடம்குலா வினரே.

## சேந்தனார் அருளிச் செய்த
## திருப்பல்லாண்டு

**கோயில்** **பஞ்சமம்**

**திருச்சிற்றம்பலம்**

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அளவில்லதோர் ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் என்றே பல்லாண்டுகூறுதுமே.

சொல்லாண்டசுரு திப்பொருள் சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள் மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே பல்லண்டு கூறுதுமே.

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத வறிவு பெற்றேன்; பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற வுழறி யுமைமண வாள னுக்காட்
பாரும் விசும்பும் மறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லை
-தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார்வீதியில் தேவர்குழாங்கள்திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

# பத்தாந் திருமுறை

### திருமூலநாயனார் அருளிச்செய்த
### திருந்திரம்

பின்னைநின் றென்னை பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவஞ் செய்கிலர்
**என்னைநன் றாக இறைவன் படைத்தனன்**
**தன்னைநன் றாகத் தமிழ் செய்யு மாறே.**

நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வு மந்திரந்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே.

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலு மெயிற்றினை
நந்தி மகன்தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் மகன்தனை புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

# பதினொராந் திருமுறை

## திருவாலவாயுடையார் அருளிச்செய்த

### திருமுகப் பாசுரம்

### திருச்சிற்றம்பலம்

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு

உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
தன்போன் என்பால் அன்பன் தன்பால்

காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

## திருமுருகாற்றுப்படை

### நக்கீரர்

அஞ்சு முகம்தோன்றில் ஆறு முகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன்.

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கபிலதேவநாயனார் அருளிச் செய்த
## மூத்தநாயனார் திரு இரட்டை மணிமாலை

திருவாக்கும் செய்கருமம் கைக்கூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தங் கை.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

## பட்டினத்துப் பிள்ளையார் அருளிச் செய்தது

ஐயும் தொடர்ந்து விழியும் செருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்றபோது ஒன்று வேண்டுவன்யான்
செய்யும் திருவெற்றி ஊருடையீர் திருநீறுமிட்டுக்
கையும் தொழப்பண்ணி ஐந்தெழுத்தோதவும் கற்பியுமே

கல்லாப் பிழையும் கருதாப்பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப்பிழையும் நின் ஐந்தெழுத்தை
சொல்லாப் பிழையும் துதியாப்பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே.

## பட்டினத்துப் பிள்ளையார் அருளிச் செய்த
## கோயில் நான்மணிமாலை

நானே பிறந்து பயன்படைத் தேன்அயன் நாரணன்எம்
கோனே எனத்தில்லை அம்பலத் தேநின்று கூத்துகந்த
தேனே திருவுள்ள மாகிஎன் தீமையெல் லாம்அறுத்துத்
தானே புகுந்தடி யேன்மனத் தேவந்து சந்திக்கவே.

## நம்பியாண்டார் நம்பி அருளிச் செய்த
## கோயில் திருப்பணியார் விருத்தம்

புண்ணிய னேஎன்று போற்றி செயாது புலன்வழியே
நண்ணிய னேற்கினி யாதுகொலாம்புகல் என்னுள்வந்திட்டு
அண்ணிய னேதில்லை அம்பல வாஅலர் திங்கள வைத்த
கண்ணிய னேசெய்ய காமன் வெளுப்பக் கறுத்தவனே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரண்டாந் திருமுறை
## சேக்கிழார் நாயனார் அருளிச் செய்த
## பெரியபுராணம்

உலகெ லாம்உ ணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இம்பம்ஆம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி! போற்றி!

அந்நகரில் அமர்ந்தங்கண் இனிதுமேவி
ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்த செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப்பாடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில்
திருக்கேதீச் சரத்தணணல் செய்யபாதம்
உன்னிமிகப் பணிந்தேத்தி அன்பரோடும்
உலவாத கிழிபெற்றார் உவகையுற்றார்.

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்புர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல் போற்றி! போற்றி!

சொல்லுவ தறியேன் வாழி! தோற்றிய தோற்றம் போற்றி!
வல்லைவந் தருளி என்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி!
எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி!
தில்லையம் பலத்து ளாடும் சேவடி போற்றி! என்ன.

நன்மைபெரு கருள்நெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்தெழும் பொழுதில்
"உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்" என்றவர்தம்
சென்மிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
"பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க" என்றார்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் **புனிதவாய் மலர்ந்தழுத**
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்
**பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்**
**போற்றுவார் கழல்எம்மால் போற்ற லாமே.**

சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றிநின்
றாதி யார்அரு ளாதலில் அஞ்செழுத்
தோதி ஏறினார் உய்ய உலகெலாம்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெல்லாம்.

**திருச்சிற்றம்பலம்.**

**சைவத் திருமுறை திரட்டு முற்றிற்று**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணகிரிநாதர் அருளிய

# திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

ஏறுமயில் ஏறிவிளை யாடு முகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசு முகம் ஒன்றே
கூறுமடி யார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகம் ஆனபொருள் நீயருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே.

உம்பர் தரு தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேன் பருகிப் பலகாலும்
எந்தனுயிர்க் காதரவு தருவாயே
தம்பி தனக்காக வனத் தணைவோனே
தந்தை வலத்தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக்கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத்தானை முகப் பெருமானே.

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ் பாடி
முக்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தான சற்குண நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத்தினி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தரலங்காரம்

நாளென் செயும்வினை தாளென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயும்கும ரேசிரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

### கந்தரனுபூதி

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இரு சொல்லற என்றலுமே
**அம்மா** பொருளென்றும் அறிந்திலேனே.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

கச்சியப்ப சிவாச்சாரியார் அருளிய

## கந்தபுராணம்

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவமும் உருவமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி ஆகக்
கருணை கூர்முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய.

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளிவாழ்க வாழ்கசீர் அடியா ரெல்லாம்.

செறிதரும் உயிர்தொறும் திகழ்ந்து மன்னிய
மறுவறும் அரனிடம் மரபின் மேவிய
அறுவகை நெறிகளும் பிறவும் ஆகிய
இறைவிதன் மலரடி இறைஞ்சி ஏத்துவாம்.

**வாழ்த்து**

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

**விருத்தாசல புராணம்**

திருவுங் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நம துள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்.

## மகேஸ்வரி தர்மராஜா

அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொங்கொளி வெண் திருநீறு பரப்பினாரைப்
போற்றுவார் கழல் எம்மால் போற்றலாமே.

அன்னை மடியில்
20 - 09 - 1925

# அமரர். திருமதி.
# மகேஸ்வரி தர்மராஜா

ஆண்டவன் அடியில்
14 - 12 - 2006

## திதி வெண்பா

காயும் விய வருடம் கார்த்திகை இருபத்தெட்டில்
தேய்பிறைத் தசமி திதியினிலே – வாயினுமனத்தும்
மருவிநின்று அகலா மாதுமை கோணேசர்பாதம்
மகேஸ்வரி தர்மராஜா மருவினாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் மகேஸ்வரி தர்மராஜா அவர்களின் சிவப்பதப்பேறு குறித்த நினைவுமலர் 13.01.2007

## நினைவு சரிதை

கப்பிய கரிமுகன் கோயில் கொண்டருளும்
தொடுவாய் இரண்டிற்கும் நடுவாய்த் திகழும்
**உப்புவெளி** எனும் உயிரனை ஊரில்
அப்பாலிருந்து அருள் ஞானசம்பந்தர்
அருளிய ஈழத்**திருக்கோண மலையிலே**
"**எம்பெருமான் தான்பணியும் எம்மடியார் தாள்பணிய**
**இன்ன வகையே எமக்கெங்கோன்** நல்குதியேல்
**என்ன குறையுமிலோம் எம்பாவாய்** "என்ற
மாணிக்க வாசகரின் மணிவாக்கிற் கொப்ப
**கார்த்திகேசு தங்கநாச்சியார்** தம்பதிகளின்
மூத்த புதல்வர் **தர்ம ராஜாவும்**
**செல்லையா செல்லம்மா** தம்பதிகளின்
நான்வாது ஏகபுத்திரி **மகேஸ்வரியும்**
**ஆங்கவர்க்கே பாங்கானார்கள்**
நான்கு ஆண்டாகியும் நன்மக்கட்பேறின்றி
ஆடிச் செவ்வாய் விரத மிருந்து
அழகன் முருகன் அவன் அருளாளே
ஐவர் ஆண்கள் அறுவர் பெண்கள்
பதினொரு பிள்ளைகள் பாரிற் பூத்தனர்
பூத்தவர் பெயர்களும் ஆத்திகம் பேசுமே
**கௌரிமுகுந்தன்** உடன் **பாலகெங்காதரனும்**
**உதயசங்கர்** உடன் **உமையாளும்**
**கலாவல்லி** உடன் **தனஞ்செயனும்**
**ஞானப்பூங்கோதை** உடன் **கார்த்தியாயினியும்**
**திருமாலினி** உடன் **சிறீதரனும்**
**சிவாத்ரீநயனியும்** செல்வமாய்த் திகழ்ந்தனர்

இல்லறம் இனிது இடம்பெறும் வேளை
**எண்பத்தி மூன்றில்** இனக்கலவரம் மூண்டு
அறுபத்தி மூன்றுடன் அப்பரை மாய்த்தது
அன்றுவரை மட்டும் அம்மாவாக இருந்த நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னர் எங்களுக்கு அப்பனும் ஆனாய்நீ
அடுத்தடுத்து திருமணங்கள் நடத்தி வைத்து
அன்புடைய மாமனும் மாமியும் ஆகி
அரவணைப்பால் பேரனும் பேத்தியும் ஆனாய்
**தொண்ணூறாம் ஆண்டு** உப்புவெளிவிட்டு
சாம்பல்தீவு நிலாவெளி கும்புறுபிட்டி சுற்றி
அன்புவழிபுரம் பாலையூற்றின் ஊடாக
பாதயாத்திரையாக திருக்கோணமலை நகர்வந்து
**வித்தியாலயம் ஒழுங்கையிலே** வியக்க வாழ்ந்தாய்
**இரண்டாயிரம் ஆண்டிலிருந்து** இந்தாவந்தாவென்று
எத்தனை இடர்கள் பட்டும் இன்னருளால் எழுந்து
பேத்திகள் பெரியராகும் பேற்றினைப் பார்த்தாயே
**வெளிநாடு சென்று வாழும் பிள்ளைகள் பேரர்களையும்**
விருப்பமாய் அழைத்து விநயமாய்ப் பார்த்தாயே
முன்னெழுந்து பின் தூங்கும் வேளையிலும்
**முதல்நீ அணிவாய் நீறு முறையாகச் சென்று**
நீ பெற்ற நேசர்க்கு **நீறணிந்தே கண்வளர்வாய்**
அப்பர் அவர்மேனியிலே பூசும் நீறும்
அம்மாநீ எங்களுக்கு அணியும் நீறும்
கட்டுடல் தளர்ந்து நீ கட்டிலில் இருந்தபோதும்
**பூசிப் புணர்த்தி உந்தன் புதல்விகள் பார்த்ததாலே**
பேச இனிய நீற்றின் பெருமையைக் கண்டுகொண்டோம்
"**சிக்குன் குனியா**" வீட்டுடன் வந்தபோது
திக்குமுக்காடினாலும் தாயே நீ தெய்வமென்று
பாசத்துடன் பார்க்கும் பிள்ளைகள் பேரர்களின்
**பாசமனதை மாற்றி பக்தியில் திருப்புதற்கோ**
**தந்திரம் ஒன்று செய்தாய்என்றுதான் தோன்றுதம்மா**
தண்ணீராகாரம் தான்சிறிது மின்றி - உன்
கண்களை மூடிக்கொண்டு - **எம்**
**கண்களைத் திறக்கச் செய்த காட்சியை என்னவென்போம்**
வெள்ளரிப்பழம் விடுபடுவது போல **மரணத்தை**
**வெல்லும் மந்திரத்தை நினைக்க வைத்தாய்**
"ஓம் த்ரயம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருக மிவ பந்தனான்
ம்ருத்தியோர் முக்ஷீய மாம்ருதாத்"
உன்சிந்தை மகிழவும் முந்தை வினைகள்
ஓயவும் திருமுறைகளை எம்வாயாலே ஓதவைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்சிந்தையையே மகிழச் செய்தாய்
உயிர்கொண்டு போம்பொழுது
குற்றாலத்து உறையும் கூத்தனல்லால் நமக்கு
உற்றார் ஒருவரில்லையென உணரவைத்தாய்
எங்களுக்கு **நீதாயானாலும்** எம் எல்லோருக்கும்
என்றுமுள்ள இறைவனே நல்ல தலைவர் என்பதை
இலகுவாய் புரியவைத்தாய்
எம்முள்ளே தேவனைத் தேடிக் கண்டிடவும்
இறுமாந்து இருந்து எமைப் பாடவைத்தாய்
இத்தனையும் செய்து இரண்டு நாட்களிலே
என்னமாய் நீரும் காசித் தீர்த்தமும் பருகி
சதா கவலையுற்றிருந்த தம் பிள்ளைகளை
சமைத்து சாப்பிடவைத்து, சாதுரியமாக
வேலை கடமையென்றும் பரீட்சை படிப்பென்றும்
ஆங்காங்கே அவரவரை இயங்க வைத்து
ஏவாமலே பணிசெய்ய இட்டம் உடனிருந்த
மூத்த மருமகனை மகனாகப் பாவித்து
கட்டாய விடுறையை கட்டாய கடமையாக்கி
நான்கு புதல்விகளும் நாற்புறமும் சூழநிற்க - உன்
மூத்தண்ணர் புதல்விகளும் மருமகளும் உடனிருக்க
தாலாட்டி வளர்த்த தங்கை தவமிருக்க
பேத்திகளும் இருவர் பெருமையோடு நின்றிருக்க
காதினில் "**சிவ சிவ**" எனக் **கதிசிவமானாயே.**
வரும்போது எல்லாம் "**என்று வந்தாயென்னும்**"
**எம்பெருமான் திருக்குறிப்பு போலும் பார்ப்பாய்**
போகும்போது எல்லாம் "**ஓம் ஓம் ஓம்**" என்னும்
**பிரணவ மந்திரத்தையே எந்நேரமும் ஒலிப்பாய்**
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

## தேற்றம்

**மனக் கவலை மாற்றும் மருந்தை மனமே**
**தனக்குள்ளே தேடின் தலைப்படும் தானே**
**உண்டு தெய்வமென ஓங்கி உரைத்தாலும்**
**கண்டு உணரவும் உணர்ந்து காணவும்**
**ஒப்பிட்டுச் சொல்வதற்கு ஒருவமை தேடியதில்**
**இப்புவியில் ஈன்றவளே ஏற்ற பிறவியாம்**
**கைம்மாறு கருதாத கடமை உணர்வே**
**உய்யும் உபாயம் தாயாய் உயர்வோம்.**
**ஓம் தத் ஸத்**

அன்பு மகன்
சங்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

பெற்று வளர்த்து என்ன கண்டீர்கள் - **அம்மா**
உற்றபொழுது நாம் அருகில்லையே **அம்மா!**
அன்றுநாம் அருகிருந்தும் அப்புச்சியின் துன்பத்தில்
தோள்கொடுக்க முடியாத பாவிகளானோம்
இன்றுநாம் கடல்கடந்துநின்று உங்கள் பிரிவால்
கதறியழும் பாவிகளானோம் **அம்மா!**
தந்தைக்குத் தலைமகனும் தாய்க்கு இளையவனும்
கொள்ளிவைக்கும் தத்துவ சாஸ்திரம் எல்லாம்
எம்வாழ்வில் பொய்த்துப் போவானேன்? **அம்மா!**
கொண்ட அன்புக்கு அர்த்தம் சொன்ன அம்மாவே
உண்மை உறவுக்கும் அர்த்தம் சொன்னீர்களே
பண்பெனும் பாலத்தை பாங்காய் கடந்து
எங்கள் இதயத்தில் முழுதாய் நிறைந்துவிட்டீர்களே
மூதுரை சொல்லும் முதுமகள் வடிவை
ஓவியத் திருவே உங்கள் வழிக் கண்டோம்
அகவாழ்வில் நீங்கள் அமைதி காத்ததால்
புறவாழ்வில் நீங்கள் பொருந்தி வென்றீர்களே!

தோற்றங்கள் மாறிப்போகும்
தோல்நிறம் மாறிப்போகும்
மாற்றங்கள் வந்துமீண்டும்
மறுபடி மாறிப்போகும்
ஆற்றிலே வெள்ளம் வந்தால்
அடையாளம் மாறிப்போகும் - **அம்மா!**
போற்றிய அன்புமட்டும்
புயலிலும் மாறாதம்மா.
முப்பத்தோர் நாட்கள் நொடிப்பொழுதில் மறைந்தும்
அன்பொழுகும் தங்கமுகம் மறந்தோமில்லை
மூண்டெரியும் துயர்க்கனவில் துடிக்கின்றோமே
வேண்டிடுவீர் இறைவனிடம் எம்முள்ளத்தின்
வேதனைகள் தீர்த்திடுவீர் விழைந்தோம் சாந்தி.

**அன்புமகன்**
**இளையவன்**
**சிறீ - கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா! எங்கள் தெய்வமே!

பாசத்திற்கு ஈடு சொல்ல முடியாது - **அம்மா!**
பிரிவிற்கு வார்த்தை சொல்ல முடியாது - **அம்மா!**
காலந்தான் பதில் சொல்ல வேண்டும் - **அம்மா!**

எங்கே! உங்கள் அன்புமுகம்
எங்கள் உள்ளத்தே இருக்கிறது
தங்கள் பாசமுகம்.
**அம்மா** என்றதும் அழுதழுது
உள்ளம் உருகுது மனம்.
**அம்மா!** எங்கே எனும் பொழுது
மனம் தள்ளாடுது
தினம் பாடும் பரவசத்தால்
உள்ளம் துள்ளாடுது.

நீங்கள் இறைவனடியில் சாந்தமானது
எமக்கு தெரிந்ததே - அதை
ஏற்றுக்கொள்ளவில்லை - என்றாலும்
தேற்றிக் கொள்கின்றது - உள்மனம்.

தாயோடு ஆறுசுவை போகுமென்பார்கள்
தந்தையோடு கல்வி போகுமென்பார்கள்
அப்புச்சியை இழந்தபோது - நாங்கள்
தவித்திராமல் இருப்பதற்கு
கொள்ளத்தான் முடியாத
கொடுத்தாலும் நிறைவே ஒழிய
குறைபடாத அன்புமறிவும் - நீங்கள் தந்து
கண்ணும் கருத்துமாக எமைக் காத்து வளர்த்தீர்களம்மா!
உங்கள் சொல்லும் செயலும்
எங்கள் வாழ்வின் திருமந்திரமன்றோ - **அம்மா!**

இயற்கையின் அழகுண்டு உங்களுக்கு - **அம்மா!**
உங்களுடன் கூடப் பிறந்தது
சாந்தமான குணமும், பொறுமையுமம்மா!
யாரையும் நொந்து பேசும் வார்த்தைகள்
உங்களுக்கு தெரியாது - **அம்மா!**
எல்லோரையும் நேசிக்கும் ஒருசில
வார்த்தைகளைத்தான் உதிர்ப்பீர்கள் - **அம்மா!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்வருத்தம் பார்க்கமாட்டீர்களம்மா!
பசிநோக்கமும் மாட்டீர்களம்மா!
பிள்ளைகள் உணவுண்டு உறங்காமல்
உறங்கவும் மாட்டீர்களம்மா!

பொறுமையுடன் நீங்கள் - எங்களுக்கு
செய்த பணிவிடைகள் தானம்மா!
தொப்புழ் கொடி உறவாய்
தொடர் பாசம் தருகின்றது.

அப்புச்சியை சுட்டெரித்த போதும்
நாங்கள் துடிதுடித்து துவண்டபோதும்
சந்தர்ப்பம் சூழ்நிலைகள் மேலும் கீழும்
இழுத்தடித்த போதும்
சிந்தனையையும் செயலையும் ஒன்றாக்கி
அன்புடனும், பாசமுடனும்
வளர்த்ததை என்னவென்று சொல்வோமம்மா!

சீறிப்பாய்ந்ததில்லை - எங்கள் மேல்
சினந்தும் பேசியதில்லை - ஒரு பொழுதும்
பேராசையில்லையம்மா - தங்களுக்கு
பெருமையும் இல்லையம்மா!

கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டார்கள் - என்பதுபோல்
காலையிலும் மாலையிலும்
இறைவனை வழிபட்டு - நீறணிந்து
காரியங்கள் தொடங்குவீர்களம்மா!

ஆசிபெறும்போதும் - நாள்தோறும்
பார்த்துச்செல்லும்பொழுதும் வாசல்வரைவந்து
வழியனுப்பி வைப்பீர்களம்மா!
கால்நடை தளர்ந்த போதுதான்
நாற்காலியில் இருந்து
நல்லாசிகள் கூறுவீர்களம்மா!

நாங்கள் பதினொருவரும்
தாயாக தங்களை பெற்றிட
முற்பிறவியில் நாங்கள் செய்த
புண்ணியம்தான் காரணமா அம்மா!
சற்று இயலாத போதுதான்
"ஓம்" என்றும் "ம்" என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினீர்கள் **அம்மா!**
எண்ணும் பொழுதெல்லாம்
நெஞ்சம் வலித்தாலும்
உற்ற நேரத்தில் - பிள்ளைகள்
பேரப்பிள்ளைகள் - அருகிருந்து
அம்மா!! அம்மம்மா!! - என்று
பணிவிடைகள் செய்ததனால்
உள்மனம் தேறுதம்மா!!

நோயுற்ற போதுதான் - நான்கு
நாட்கள் மட்டும் - கண்களை
மூடிக்கொண்டு இருந்தீர்**களம்மா!**
இறைவன் நாமங்களை
பிள்ளைகள் பேரப்பிள்ளைகள்
ஓதுவதை கிரகித்தே
நித்திரையானீர்**களம்மா!**

தூரத்துக் கண்ணீர்
ஆபத்துக்கு உதவாது - என்று
தெரிந்துதான் வெளிநாட்டிலிருந்து உங்களுடன்
தொலைபேசியில் - கடைசிநேரத்தில்
கதைப்பதற்கும் - துடிதுடித்த
பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுக்கு
இறுதிமூச்சையே - தொலைபேசியில்
ஒலிக்கச் செய்தீர்**களம்மா!!**

மக்கள் மருமக்கள் - என்றபேதம் இல்லை**யம்மா!!**
அம்மா!! அம்மா!! என்று
ஆயிரம் தடவை அழைத்தாலும்
ஆண்டாண்டு தோறும்
அழுது புரண்டாலும்
வரமாட்டீர்கள் **தானம்மா!**
ஒருயிராய் ஒன்றிவிட்ட தங்கள்
அன்பையும், பாசத்தையும்
உருவையும், உள்மனதிலிருத்தி
ஆறுதலடைகின்றோம் - **அம்மா!**
அம்மா!! எங்கள் தெய்வமே!
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**அன்பு மகள்**
**மாலி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையல் என்றபோதே பரிந்தெடுத்து - செய்யஇரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி.

**பட்டினத்தார் புலம்பல்**

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே
இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழல்எம்மால் போற்ற லாமே.

**சேக்கிழார்**

**சுபம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானமலர்

"ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள்
ஞானத்தால் தொழுவேன் உனை நானல்லேன்
ஞானத்தால் தொழுவார்கள் தொழக்கண்டு
ஞானத்தால் உனை நானுந் தொழுவனே."

அந்த வகையிலே நாம் தெய்வத்தை தொழுவதற்காக தங்கள் ஞானத்தால் கண்டுணர்ந்து, எங்களையும் உணர்ந்து காண்பதற்காக வழிகாட்டிய ஞானியர்களுள் தாய்சேய் உறவை மையமாக வைத்து திருவாய் மலரப்பெற்ற யாமறிந்த ஒரு சில ஞானியர்களின் ஞானமலர்களை தினமும் நினைவு கூருவோம்.

**1. வீரத்துறவி சுவாமி விவேகானந்தர்**

நாம் செய்கின்ற பாவ புண்ணியம் காரணமாக, நரக சொர்க்க உலகங்களை அடைந்தாலும், அவற்றை சிலகாலம் அனுபவித்துவிட்டு மறுபடி இக்**கர்ம பூமி**யிலேயே பிறக்க வேண்டும்.

மீண்டும் பிறக்காமல் இருக்க வேண்டுமானால் கைமாறு கருதாத **தாய் அன்பின்** கடமை உணர்வோடு **கர்மங்களை** ஆற்ற வேண்டும் என்கிறார்.

**2. பகவான் இராமகிருஷ்ண பரமகம்சர்**

யாரால் பற்றை விட முடியவில்லையோ, என்னதான் முயன்றாலும் "**நான்**" என்ற அகங்காரம் போகவில்லையோ அவர்களுக்கு "நான் சேவகன், நான் பக்தன் என்ற பாவனா முறையே சிறந்தது. அவர் அம்பாளிடம் வேண்டும் முறையைப் பாருங்கள்.'
கடுங்காய்ச்சல் அடிக்கிறது **அன்னையே! உன்**
கருணைதான் மருந்தாக அமைய வேண்டும்! ...........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா! இதோ!

உனது பாவம் - புண்ணியம், ஞானம் - அஞ்ஞானம், தூய்மை - அசுத்தம், தர்மம் - அதர்மம் எடுத்துக்கொள் எனக்குத் தூய பக்தியை மட்டுமே கொடு" என்கிறார்.

## 3. சங்கராச்சாரியார் (பெரியவர்)

பக்திநெறியில் ஈடுபடுவதற்கு மனம் ஒத்துழைக்க வேண்டும். ஆனால் மனம் அலைபாய்வது, குரங்குபோல் பாய்வது மனதை அடக்குவதற்கு அதனுடன் போராடுவதைவிட்டுவிட்டு அதன் போக்கை திருப்புவதே சிறந்த வழி என்கிறார்.

1. **தாய்க்**குரங்கை குட்டி இறுகப் பற்றிக் கொள்ளாவிட்டால் **தாய்** தாவிச் செல்லும்போது குட்டி தவறி விழ இடமுண்டு.
2. **தாய்ப்**பூனை குட்டியை தன் வாயினாலேயே கவ்வி இடத்துக்கிடம் காவிச்செல்வதால், தாய் இட்டவழி என்று தவறாமல் இருப்பதற்கு வாய்ப்புண்டு.

**தாயாகிய** இறைவன் திருவடிகளை, மனமானது இறுகப் பற்றிக்கொண்டு **தாய்** இட்டவழி என இந்த இருமுறைகளையும் கைக்கொள்ளச் சொல்கிறார்.

## 4. பிரம்மஞானி சுவாமி கெங்காதரானந்தா

ஞானத்தை அடைவதற்கான யோகங்களில் **லய யோகம்** மிக முக்கியமானதாகும். இதுவே கூட்டுப் பிரார்த்தனை என்று சொல்லப்படுகிறது.

நாம சங்கீர்த்தனத்தில் எல்லோரும் பங்குகொண்டு, கூட்டுப் பிரார்த்தனை மூலம் லயயோகத்தை அப்பியாசித்து, இறைவனை அடைய முயல வேண்டும்.

அம்பாளே எம் நிலையைக் கண்டு இரங்கும் வகையில் அம்பாளிடம் எம்மை இணைத்து வைக்க முயல்வதைப் பாடிப்பருகுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராகம்: சாரங்கா** **தாளம்: ரூபகம்**

ஓங்கார ஸ்ரீதரியே
என்னை நினைந்தருள்வாய்

(ஓங்கார)

பூர்வ வினைத் தளையால்
வாடித் தளர்ந்**தேனம்மா**
ஆரமுதத் தாயே - என்னை
வாரி அணைத்திடுவாய்

(ஓங்கார)

உற்றார் உறவினர்கள்
என் உற்றவர் அல்லர் **தாயே**
உன்னை அல்லாது மற்றார்
யாரும் துணையில்லையே (ஓங்கார)

**ஞான மலர்** மலர்ந்தாய்
ஞான மதுவை உண்டு
ஐம்பிழை தீர்த்திடுவேன்
ஆனந்தத் தீங்கனியே (ஓங்கார)

ஞானப் பிழம்பொளியே நின்
பேரன்பில் ஏற்றிச் செல்வாய்
ஊனுடலை நம்பி
வாழ்வதும் வாழ்வாமோ
தெய்வத் திருமணியே
மாதுரி நீயே கதி

(ஓங்கார)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

கடந்த 14.12.2006 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி
அமரர். மகேஸ்வரி தர்மராஜா அவர்களின்
இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டவர்களுக்கும்,
மலர்வளையங்கள், பதாகைகள்,
கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம்மூலமும்
அஞ்சலி செலுத்தியவர்களுக்கும்,
தொலைபேசி, தந்திகள் மூலமும், நேரிலும்
அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்,
லண்டன், கனடா வாழ் எம் சகோதரர்களை
கண்டும் கதைத்தும் அனுதாபம் தெரிவித்த
கடல்கடந்த நெஞ்சங்களுக்கும்
31ம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை
நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் அனைவருக்கும்,
இம்மலரை அச்சேற்று உதவிய
Rainbow நிறுவனத்தினருக்கும்
எமது மேலான நன்றிகளை
பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இவ்வண்ணம்
தர்மராஜா குடும்பத்தினர்,
இல: 26A, வித்தியாலயம் ஒழுங்கை,
திருக்கோணமலை,
இலங்கை.
13.01.2007
தொலைபேசி 026 - 2221633



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகேஸ்வரி தர்மராஜா

கார்த்திகேசு — தங்கநாச்சியார்

10 - ஜெயகௌரி
09 - ரதிராணி
08 - பத்மஜோதி
07 - மணிமேகலாதேவி
06 - சரோஜினிதேவி (காலஞ்சென்ற)
05 - இராஜலக்ஷ்மி
04 - நவரத்தினதுரைசிங்கம் } (காலஞ்சென்ற)
03 - சிவசோதிப்பிள்ளை } (காலஞ்சென்ற)
02 - இராசலட்சுமி
01 — தர்ம...

- கௌரிமுகுந்தன் (தி / ப.நோ.கூ. சங்கம்)
  +
  சுரேஸ்வரி (சுரேஸ் முன்பள்ளி)
- பாலகெங்காதரன் ((முன்னாள் பொதுமுகாமையாளர் தி/ ப.நோ.கூ.சங்கம் OFER...
  +
  குகனேஸ்வரி (தி/ காணி நிர்வாக திணைக்களம்)
- உதயசங்கர் (மக்கள் வங்கி)
  +
  மதிவதனி (தி/கோணேஸ்வரா இந்துக்கல்லூரி)
- உமையாள் (அத்வைதன் முன்பள்ளி)
  +
  இராதாமனோகரன் (தி/கிராம அபிவிருத்தி திணைக்களம்)
- கலாவல்லி
  +
  நவசிவராசா (சந்திரா டெக்)
- தனஞ்செயன்
  +
  பத்மநிதி { கனடா }
- ஞானப்பூங்கோதை
  +
  சண்முகநாதன் { கனடா }
- கார்த்தியாயினி
- திருமாலினி (தி/ நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம்)
  +
  சிவஞானம் தி/ பொது வைத்தியசாலை
- சிறீதரன் (கனடா)
- சிவாத்ரீநயனி
  +
  சிறீஸ்கந்தராஜா { இலண்டன் }

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...ரி தர்மராஜா வம்சாவழி

...சியார்

செல்லையா — செல்லம்மா

சிவசேகரம், அழகுராசா, நவரெத்தினராஜா

...ந்சென்ற)

...தர்மராஜா — மகேஸ்வரி

} தர்மவிலாஷினி, மோஷிகரன்

...ா.கூ.சங்கம் OFERR நிறுவனம்)

} கிருத்திகா

} சிவாத்மனி, சர்வாத்மனி

} அபர்ணா, திரிவேணி

} அபிலா, நிவ்யா

} லாவண்யா, டிவ்யன்

} ஹரிவன், ஷனகன்

...கம்)

} அத்வைதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராவணன் தாயாருக்காக.....



ஏற்படுத்திய ஊற்றும் ( கன்னியா வெந்நீருற்று)



பெயர்த்த வெற்பும் (இராவணன் வெட்டு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org